RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2019

# சங்க இலக்கியங்களில் மனிதர்களோடு அஃறிணை உயிர்களின் உறவுகள்

**க. கீதாரமணி** [அ, *]

[அ] தமிழாய்வுத் துறை, ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கல்லூரி, கரூர்-05, தமிழ்நாடு, இந்தியா.

# Relationships of Animals with Humans in Sangam Literature

**K. Geetharamani** [a, *]

[a] Research Department of Tamil, Sri Sarada Niketan College for Women, Karur-639005, Tamil Nadu, India

* Corresponding Author: selvamgeetha899@gmail.com

Received: 26-06-2022
Revised: 15-09-2022
Accepted: 27-09-2022
Published: 05-11-2022

Check for updates

**ABSTRACT**

It is impossible for created beings in the world to function independently of each other. Among them, the relationship between humans and non-human beings has an inseparable bond. During the Sangam age, the relationship between humans and animals was more prevalent than between human beings. Such contact led human beings to think of animals as their relations. The Sangam literature itself bears testimony to the fact that these animals became an endless path in the journey of life of the ancient peoples. This study is intended to show the present and future people the relationship that arose in the state of helping the human race and the life of the animals, and the way in which people regarded themselves as family relations because of their superior feelings of love, affection, sharing, and warmth.

**Keywords:** Sangam literature, Animals, Humans, Relationships

## முன்னுரை

வாழ்வில் மனித உயிர்களாகினும் மற்ற உயிர்களாகிய தாவரங்கள், பூச்சியினங்கள், விலங்குகள் மற்றும் பறவைகளாகினும் ஒன்றோடொன்று தொடர்பை ஏற்படுத்தக்கூடிய நிலையே உறவாகும். இத்தகு உறவுகளின் கோப்பே உயிரினங்களின் வாழ்விற்கு உரமாகின்றன. மனித இனம் தன் இனத்தோடு கொண்டுள்ள உறவுகளை விட மனித குலத்திற்கும் அஃறிணை உயிர்களுக்கும் இடையே உள்ள உறவுகள் நமக்கு வியப்பை அளிப்பதாகும். இத்தகைய மேன்மைமிகு உறவுகளை சங்க இலக்கியங்களின் வழியில் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மகளாகவும் தங்கையாகவும் திகழும் புன்னை மரம்

தலைவியும் அவளின் தோழியரும் கடற்கரையில் புன்னை விதையை அழுத்தி விளையாடினர். மழையின் அருளினால் புன்னை விதையானது செடியாக வளர்ந்திருந்தது. அதனைக் கண்ட தலைவியின் தாயானவள் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்று இனிதாக வளர்த்து மரமாக்கினாள். புன்னை மரத்தினை முதல் மகளாகவே பாவித்து அதனை தன் மகளுக்கு அக்காவாக அறிமுகம் செய்தாள். தலைவியும் தலைவனும் புன்னை மரத்தடியில் காதல் உணர்வினால் சந்திப்பதற்கான சூழல் ஏற்பட்ட நிலையில் தலைவியானவள் தலைவனிடம் புன்னை மரமானது அவளின் அக்கா என்பதனையும் அதனால் தலைவனோடு பேசுவதற்கு வெட்கமாக உள்ள நிலையினையும் கூறி வேறு மர நிழலுக்கு அழைத்துச் சென்றாள். இதனை,

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி,

மறந்தனம் துறந்த காழ்முளை அகைய,

நெய்பெய் தீம்பால் பெய்துஇனி வளர்ப்ப

நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்என்று,

அன்னை கூறினள், புன்னையது சிறப்பே!"

என்னும் செய்தியினை நற்றிணையில் நெய்தல் திணை பாடல் வரிகள் வெளிபடுத்துகின்றன. இதன் மூலமாக மனித இனங்கள் தன் இனமல்லாத மற்ற உயிரான மரத்தினை தன் மகளாகவும், தங்கையாகவும் உறவு கொண்டு உறவுகளுக்கு உயிரூட்டும் நிலையினை அறிய முடிகின்றது (Nagarajan, 2007).

## மனித குழந்தைகளுக்கும் யானைக்குட்டிகளுக்கும் இடையே உள்ள உறவு

பெண் யானையின் குட்டியானது குறத்தியின் குழந்தைகளோடு ஓடியாடி விளையாடியது என்பதனை,

"முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி

நறுவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற

குறிஇறைப் புதல்வரொடு மறுவந்து ஓடி"

என்ற பாடலினைக் கூறுவதன் வாயிலாக மக்களுக்கும் யானைகளுக்கும் இடையே உள்ள சுமூகமான உறவு நிலையை வெளிப்படுத்துகின்றது. பழங்காலத்தில் அஃறிணை உயிர்களும் மழலைச் செல்வங்களோடு கூடி விளையாடியதை நம்மால் அறிய முடிகிறது. அதுபோல தற்காலத்தில் நாய், ஆடு, பூனை முதலான அஃறிணை உயிர்களோடு மழலைச் செல்வங்கள் கூடி விளையாடி மகிழ்வதைக் காண்கிறோம் (Nagarajan, 2007).

ஊர் மன்றத்தில் வளர்ந்துள்ள விளா மரத்தின் பழம் வீட்டு முற்றத்தில் விழுந்தது. அதனை அறிந்த பெண் யானைக் குட்டி, கருமையான கண்களையுடைய வேட்டுவப் பெண்ணின் அன்பிற்குரிய மகனோடு சேர்த்து சென்று வீட்டு முற்றத்தில் இருக்கும் விளாம் பழத்தினை எடுத்தது. இதனை,

"மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்,

கருங்கண் எயிற்றி காதல் மகனொடு

கான இரும்பிடிக் கன்றுதலைக் கொள்ளும்"

என்ற புறநானூறு பாடல் வரிகள் உணர்த்துகின்றன (Puliyur Kesigan, 2015). இவற்றின் மூலம் யானைக் குட்டியும் குழந்தையும் அன்பின் வழியில் உறவுகொள்ளும் நிலையினை உணர முடிகிறது

## குரங்குகளைக் குழந்தைகளாக வளர்த்தல்

கொற்கை நகரத்து உப்பு விற்கும் உமணர்கள் பெண் குரங்குகளை அவர்களின் குழந்தைகளாகவே கருதி தான் பெற்ற குழந்தைகளோடு சேர்த்து அந்த மந்திகளையும் வளர்த்தனர். மந்திகளுக்கு நுணா மரத்தின் சிறிய கட்டைகளைச் செப்பு போன்று வடிவமைத்து மாலையாகக் கழுத்தில் அணிவித்தும், நெட்டியால் செய்த தலைமாலையை அதன் காதினடியில் அணிவித்தும் அலங்கரித்தனர். உமணர்கள் தங்களின் உப்பு வண்டியில் மந்திகளையும் அவர்களின் குழந்தைகளையும் சேர்த்துக் கொண்டு உப்பு வணிகதிற்குச் சென்றனர். இதனை,

"நோன்பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த

மகாஅர் அன்ன மந்தி, மடவோர்

நகாஅர் அன்ன, நளிநீர் முத்தம்"

என்னும் அடிகளின் மூலமாக உமணர்கள் தன் குழந்தைகளை பராமரித்தும், அலங்கரித்தும் வளர்ப்பதைப் போன்று மந்தி குரங்குகளை தன் பெண் குழந்தையாக உறவு கொண்டு வளர்த்துள்ள பாங்கினை உணர முடிகிறது (Subramaniyan, 2010).

## சிபி மன்னனிற்கும் புறாவிற்கும் இடையே உள்ள உறவு

பருந்தின் தாக்குதலிலிருந்து அஞ்சித் தப்பிச் சென்ற புறா சிபிச் சக்கரவர்த்தியிடம் அடைக்கலம் புகுந்தது. தன்னை நம்பி வந்த புறாவினைக் கைவிடாத வகையில் பருந்திடம் புறாவை விடுவிக்குமாறு வேண்டி, பருந்தின் பசியைப் போக்க புறாவின் எடைக்கு நிகராக அவரின் தசையை எடுத்துக்கொள்ளக் கூறி துலாக்கோலில் ஏறினார். இந்த நிகழ்ச்சியைக் கண்ட, மண்ணில் வாழும் மக்களின் துன்பங்கள் நீக்கும் பொருட்டுக் காட்டில் வெப்பத்தைத் தாங்கிக் கொண்டு காற்றை உணவாகப் பெற்றுத் தவத்தை மேற்கொள்ளும் சடைமுடியை உடைய முனிவர்களும் வியப்பில் ஆழ்ந்தனர். இதனை,

"நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்,

தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்,

கால்உணவு ஆகச் சுடரொடு கொட்கும்

அவிர்சடை முனிவரும் மருள, கொடுஞ்சிறைக்

கூர்உகிர்ப் பருந்தின் ஏறுகுறித்து, ஒரீஇத்,

தன்அகம் புக்க குறுநடைப் புறவின்."

என்னும் புறநானூற்றுப் பாடலடிகளின் மூலமாக மனிதர்களுகும் பறவைகளுக்கும் இடையே உள்ள உறவுநிலையை உணரமுடிகிறது (Puliyur Kesigan, 2015).

## வளர்ப்பில் உள்ள உறவு

மென்மையான நடையினை உடைய காட்டுப் பூனைக்கு அஞ்சிய இளமையான பெட்டைக்கோழி, தன் உயிரைக் காக்கும் பொருட்டு நீண்டு கூவியது. இந்தக் கூவலைக் கேட்ட பெண் ஒருத்தி அவளால் வளர்க்கப்படும் சேவலிற்கு ஆபத்து நேர்ந்துவிட்டதோ என நினைந்து தேடுகையில் அவளின் கண்முன் கொண்டையை உடைய சேவல் தென்பட்டது. அதன்பின் அவளின் அச்சம் நீங்கியது. இதனை,

"ஊர்முது வேலிப் பார்நடை வெருகின்

இருட்பகை வெரீஇய நாளினும் பேடை

உயிர்நடுக் குற்றுப் புலாவிட்டு அரற்றச்

சிறையும் செற்றையும் புடையிநள் எழுந்த

பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து"

என்னும் புறநானூற்றுப் பாடல் மூலம் மனிதர்களால் அன்புகொண்டு இரையளித்துச் செல்லமாக வளர்க்கப்படும் அஃறிணை உயிரினங்களுக்கு ஏதேனும் ஆபத்து நேரிடின் அதனைக் கண்டு அவர்களுக்கு மனம் துயரப்படும் நிலையானது மனிதர்களுக்கும் வளர்ப்பு உயிரினமாகிய பறவைகளுக்கும் இடையே உள்ள உறவு மேலும் வலுவடையும் விதத்தினை உணரமுடிகிறது (Puliyur Kesigan, 2015).

## ஆதரிப்பில் உள்ள உறவு

மலைப் பகுதியில் வாழ்ந்த மயில் அகவியது. அந்த அகவல் ஓசையைக் கேட்ட பேகன் குளிரின் நடுக்கத்தால் மயில் அகவுவதாகக் கருதி, அதன் குளிரைப் போக்க, தன் போர்வையை மயிலுக்குக் கொடுத்தார். இதனை,

"வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்

கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய

அருந்திறம் அணங்கின் ஆவியர் பெருமகன்

பெருங்கல் நாடன் பேகன்"

என்ற அடிகளின் மூலம் மயிலின் இன்னல்களைப் புரிந்துகொண்டு பேகன் தன்னுடைய போர்வையை வழங்கியதால் அவரின் உயர்ந்த குணங்களால் நிலவிய உறவினை அறிய முடிகிறது (Subramaniyan, 2010).

## முடிவுரை

பழந்தமிழர்கள் அஃறிணை உயிர்களை தங்களின் மகளாகவும், தங்கையாகவும், நண்பர்களாகவும் உறவு கொண்டு அவைகளை, விட்டு அகலாமல் இணைந்தே வாழ்ந்துள்ளனர். அஃறிணை உயிர்களும் அவர்களின் உறவுகளுக்கு மதிப்பளித்து அவ்வுறவுகளை போற்றியுள்ளன. இவற்றின் மூலம் மனிதன் பிற உயிர்களோடு அமைத்திருக்கும் வேறுபாடில்லா உறவுகளை சங்க இலக்கியங்களின் வழி உணர முடிகிறது.

## References

Balasubramaniyan, K.V. (2007) Natrinai, New Century Book House, Chennai, India.

Nagarajan, V. (2007) Kurunthogai Part-II, New Century Book House, Chennai, India.

Puliyur Kesigan, (2015) PuranaanooruSaradha Pathippagam, Chennai, India.

Subramaniyan, S.V. (2010) Sirupaanaatrupadai, Manivaasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License